கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொதுக்கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2018)

# IS 2213 History of Sri Lanka Muslims up to 1948

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – **I** இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – **II** இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பாக பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துக.

    (i) அறேபிய - இலங்கைத் தொடர்புகள் (05 புள்ளிகள்)

    (ii) ஆரம்பகால முஸ்லிம் குடியேற்றங்கள் கரையோரங்களில் அமைந்திருந்தமைக்கான காரணங்கள் (05 புள்ளிகள்)

    (iii) முஸ்லிம்களின் உள்நாட்டுக் குடியேற்றம் (10 புள்ளிகள்)

02. ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களின் சமூக நலப் பணிகளைப் பின்வரும் அம்சங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

    (i) எழுத்துப் பணிகள் (04 புள்ளிகள்)

    (ii) "ஜம்இய்யதுல் இஸ்லமிய்யா" ஊடாக ஆற்றிய பணிகள் (06 புள்ளிகள்)

    (iii) துருக்கித் தொப்பிப் போராட்டத்தில் பங்கெடுத்தல் (10 புள்ளிகள்)

03. அறபுத் தமிழ் தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

    (i) அறபுத் தமிழ் என்றால் என்ன? (04 புள்ளிகள்)

    (ii) அறபுத் தமிழின் தோற்றத்துக்கான காரணிகள் எவை? (06 புள்ளிகள்)

    (iii) இலங்கை வாழ் முஸ்லிம்களிடையே அறபுத் தமிழ் வழக்கொழிந்து செல்வதற்கான காரணங்கள் யாவை? (10 புள்ளிகள்)

# பகுதி – II

04. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலப்பகுதிகளைவிட இலங்கை முஸ்லிம்களுக்கு சாதகமாக அமைந்த பாங்கை அவர்களது பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தின்போது முஸ்லிம்களுக்கு எவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்தினர் என எடுத்துக்கூறி, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப அவர்கள் தங்களுக்கு சாதகமான கொள்கைகளைக் கடைப்பிடித்த பாங்கினை அடையாளப்படுத்துக.

(20 புள்ளிகள்)

06. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பேராசிரியர் எம்.எம். உவைஸ் அவர்கள் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

07. தென்னிந்திய முஸ்லிம்களின் கலாசாரம் இலங்கை முஸ்லிம்களிடையே ஏற்படுத்திய சாதக, பாதக விளைவுகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

*****